**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு</u>**

**<u>STC No.664/2024</u>**

எதிரி ஆஜர்.

அ.சா.– 1 திரு. பழனி த/பெ. சியாளன் நாள் – 11.05.2026

குறுக்கு விசாரணை தொடர்ச்சி –

நான் என்ன காரணத்திற்காக எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் வீட்டு செலவிற்காக எதிரி பணம் வாங்கினார். நான் கொடுத்ததாக சொல்லும் ரூ.1 லட்சம் தொகையை வட்டிக்கு கொடுத்தேனா அல்லது கைமாத்தாக கொடுத்தேனா என்றால் வட்டிக்கு கொடுத்தேன். எவ்வளவு வட்டிக்கு கொடுத்தேன் என்று கேட்டால் மாதம் ரூ.1 லட்சம் தொகைக்கு ரூ.2000/– வட்டி கொடுக்க வேண்டுமென்று கொடுத்தேன். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் எதிரியின் வியாபாரத்திற்கு கடன் கொடுத்ததாக என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் உண்மைக்கு மாறாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கடை வைப்பதற்காக பணம் கொடுத்தேன். நான் எனது குறுக்கு விசாரணையில் எதிரி பணம் கேட்ட அன்றே பணத்தை கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் அந்த விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

எதிரி எத்தனை மாதங்கள் வட்டி கொடுத்தார் என்றால் 2023ல் நவம்பர், டிசம்பர்ன ஆகிய இரண்டு மாதங்களுக்கு வட்டி கொடுத்தார். ரொக்கமாக கொடுத்தாரா அல்லது வங்கி மூலமாக கொடுத்தாரா என்று கேட்டால் ஜிபே மூலமாக டிரான்வர் செய்தார். அதன் ஸ்கிரின்ஸாட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் இருந்தால் தாக்கல் செய்கிறேன். என்னுடைய வங்கி கணக்கு பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. நவம்பர் 2023 ல் எதிரி என்னிடம் பணமே பெறவில்லையென்று சொன்னால் தவறு. எதிரி பணம் பெற்றிருந்தால் பணம் பெற்றதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் காசோலை மட்டும் தான் கொடுத்தார். எதிரியின் மனைவியான சதிலீலாவதியை எனது மனைவிக்கு தெரியுமா என்றால் தெரியும். எவ்வாறு இருவருக்கும் அறிமுகம் என்று கேட்டால் என் மூலமாக எதிரியின் மனைவியை என் மனைவிக்கு 3 வருடங்களாக தெரியும். எந்த வருடத்தில் இருவரும் அறிமுகமானார்கள் என்று கேட்டால் தெரியாது. 2022 ம் ஆண்டில் இருவருக்கும் அறிமுகம் இருக்குமா என்று கேட்டால் தெரியவில்லை.

எதிரியின் மனைவி என்னிடமோ, எனது மனைவியிடமோ கடனாக பணம் பெற்றுள்ளார்களா என்றால் பெற்றுள்ளார்கள். எவ்வளவு பணம் பெற்றுள்ளார்கள் என்று கேட்டால் ரூ.2 லட்சம் சொத்தை பதிவு செய்து அடமானம் கொடுத்து வாங்கினார். அந்த சேப்டர் முடிந்துவிட்டது. எந்த வருடம் கடன் பெற்றார்கள் என்றால் நினைவில்லை. எனது மனைவி என்ன பணி செய்கிறார் என்றால் இல்லத்தரசி. அடமானம் பதிவு செய்யும் போது நான் பணியிலிருந்தேனா என்றால் இருந்தேன். அப்போது எனது சம்பளம் எவ்வளவு என்று கேட்டால் ரூ.50 ஆயிரம் இருக்கும். அந்த ரூ.2 லட்சம் என்னுடைய பணம் தான் என்றாலும், எனது அரசு வேலைக்கு பாதகம் வரும் என்பதால் எனது மனைவியின் பெயரில் அடமானம் செய்துள்ளேன் என்று சொன்னால் தவறு. ரூ.2 லட்சம் தொகை வட்டிக்கு கொடுக்கப்பட்டதா என்றால் ஆம். எவ்வளவு வட்டி தொகைக்கு என்று கேட்டால் மாதம் ரூ.4,000/-. அந்த வட்டி தொகை என்னிடம் வருமா அல்லது எனது மனைவியிடம் வருமா என்றால் என்னிடம் தான் கொடுப்பார். மேற்படி ரூ.2 லட்சம் எதிரியின் மனைவி பெற்று இரண்டு மாதங்கள் வட்டி செலுத்திய பின்பு தான் எதிரியின் மனைவி ரூ.50 ஆயிரம் கடனாக பெற்றார் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் மனைவி பெறவில்லை. எதிரியின் மனைவியிடம் காசோலை இல்லாததால் ரூ.50 ஆயிரத்திற்கு ஆவணமாக எதிரியினுடைய காசோலை கொடுத்தார் என்று சொன்னார் சரியல்ல அது தனி இவ்வழக்கு பண பரிவர்த்தனை தனி. அதற்கும், இதற்கும் சம்மந்தம் இல்லை.

எதிரி மற்றும் அவருடைய மனைவி இருவரும் மாதம் ரூ.6000/- வட்டி செலுத்தி வந்தார்கள் என்றால் தவறு. ஒரு சில சமயம் சேர்ந்து வரும். நான் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. எனது பிரமாண வாக்குமூலத்தில் வட்டிக்கு பணம் கொடுத்தேன் என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை. எனது மனைவி ரூ.2 லட்சம் எதிரியின் மனைவிக்கு கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் என்னிடம் பணம் கேட்டார்கள் என்னிடம் பணமில்லை வேறொருவரிடம் ஏற்பாடு செய்து கொடு என்று கேட்டார்கள். எனது மனைவியின் பெயரில் அவருடைய நகையை வங்கியில் அடமானம் வைத்து எதிரிக்கு வாக்கு கொடுத்ததால் பணம் ஏற்பாடு செய்து கொடுத்தோம். அந்த பணம் வேறு ஒருவருக்கு கொடுக்க வேண்டிய பணம் அதற்கான ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் உள்ளது. எந்த வங்கியில் நகை அடமானம் வைத்தேன் என்று கேட்டால் இந்தியன் வங்கியில். தேதி ஞாபகமில்லை. அந்த ஆவணத்தை தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க

முடியுமா என்று கேட்டால் முடியும். எனது மனைவி பெயரில் நகையை அடமானம் வைத்தேன். எதிரி என்னிடம் பணமே பெறவில்லை எதிரியின் மனைவி தான் என்னிடம் பணம் பெற்றார் என்று சொன்னால் தவறு நான் தான் எதிரியிடம் நேரடியாக பணம் கொடுத்தேன். நான் அவரது மனைவியிடம் பணம் பெற்றதுமில்லை கொடுத்ததுமில்லை. அடமானம் செய்து பணம் கொடுக்கும் போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன் பணத்தை ஏற்பாடு செய்ததே நான் தான்.

நான் அரசு வேலையில் இருப்பதால் வட்டிக்கு கொடுப்பது தவறு என்பது தெரியுமா என்று கேட்டால் தெரியாது. புகார், பிரமாண வாக்குமூலத்தில் நான் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்று சொன்னால் தவறு. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லையென்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் தவறு.

**மறு விசாரணை –** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.